(3) அறிக்கை அளித்தல் (தொடர்ச்சி).

ஆ. மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளித்தல்

திரு. வ. மு. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, ''கால்நடை வளர்ப்புத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மேற்படி குழுவின் அறிக்கையை (ஒன்பதாவது அறிக்கை) அளிக்கிறேன்.''

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. காவல் சட்டங்கள் (திருத்தமும் செல்திறனாக்குதலும்) சட்ட முன்வடிவு, 1979.

THE HON'BLE THIRU. K. NARAYANASWAMY : Mr. Speaker Sir, I beg leave to introduce the bill The Tamil Nadu Police Laws (Amendment and Validation) Bill, 1979.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

THE HON'BLE THIRU K. NARAYANASWAMY : Mr. Speaker Sir, I introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(ஆ) தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.